சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

சுய கற்றல் கையேடு

அலகு 05- தயாரிப்பு கைத்தொழில்

தரம் - 10

புவியியல்

தயாரிப்பு - வே.மொ.பிரசாந்தி

(கே/தெஹி/எதுராபொல த.வி. புளத்கொவுபிட்டிய

# தயாரிப்பு கைத்தொழில்

## 1. தயாரிப்பு கைத்தொழில் என்றால் என்ன?

- மனிதன் தனது திறன்கள், தொழினுட்ப அறிவு, மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி முடிவுப்பொருட்களையும், அரைகுறை முடிவுப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் தயாரிப்பு கைத்தொழில்கள் என அழைக்கப்படுகிறது.
- 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியுடன் கைத்தொழிற்துறை மீண்டும் உயிர் பெற்றது.
- இக்காலத்தில் குடிசை கைத்தொழில்களாக காணப்பட்ட கைத்தொழில்கள், இயந்திரங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் உயர் தரத்துடனான உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டது.

## 2. பிரதான தயாரிப்பு கைத்தொழில்கள்.

- ✓ இரும்புருக்கு கைத்தொழில்
- ✓ மோட்டார் வாகனக் கைத்தொழில்
- ✓ கப்பல் கட்டும் கைத்தொழில்
- ✓ இலத்திரனியல் கைத்தொழில்
- ✓ பருத்தி நெசவுக் கைத்தொழில்

## 3. கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.


- சக்தி மற்றும் வலு - நிலக்கரி, நிலநெய், நீர்மின்சக்தி, அணுசக்தி,
- போக்குவரத்து - நீர், நிலம், விமானப்போக்குவரத்து, போக்குவரத்து தொடர்பான தொழிற்நுட்பம்.
- உட்கட்டமைப்பு வசதிகள் - வங்கிகள், காப்புறுதி, தொடர்பாடல், ஏனையவை.
- முதலீடு - அரசதுறை, தனியார்துறை, பல்தேசிய கம்பனிகள்.
- உழைப்பு - மனித உழைப்பு திறன், திறனற்ற, இயந்திரம் (ரோபோக்கள்)
- சந்தை - உள்ளூர், வெளிநாடு
- அரசாங்கக் கொள்கை - விரிவாக்கம் தொடர்பான தீர்மானம்
  - கைத்தொழில் குடியிருப்பு, நகரங்கள், கிராமங்கள்
  - வரிச்சலுகை

- மூலப்பொருள் - விவசாய மூலப்பொருள், கனிப்பொருட்கள், செயன்முறைப்படுத்தபட்ட மூலப்பொருட்கள்.

# இரும்புருக்கு கைத்தொழில்

- 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் மிக வேகமாக வளர்ச்சி அடைந்தது.
- ஆரம்பக்காலத்தில் இக்கைத்தொழில் இரும்புதாது, நிலக்கரி, சுண்ணக்கல், படிவுகள் கூடுதலாக காணப்பட்ட நாடுகளில் மட்டுமே அமையப்பெற்றிருந்தது.
- மூலப்பொருட்களை இறக்குமதி செய்து அதன் மூலம் உயர் அபிவிருத்தி மட்டத்தை அடைந்த நாடுகளும் உண்டு. (உ.ம் - ஜப்பான்)
- நாட்டின் தொழில்நுட்ப பலத்தினையும், ஏனைய உபகரணங்களின் உற்பத்திக்கு மூலப் பொருளாக விளங்குவதினாலும் முக்கிய இடம் வகிக்கின்றது.
- இரும்புப்படிவின் அடிப்படையில் இரும்புருக்கினை மேற்கொள்கின்றனர்.
- கழிவு இரும்பினை பல்வேறு உலோகங்களுடன் கலந்து உருக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.
- கைத்தொழில் புரட்சியின் ஆரம்பத்தில் இயந்திரங்கள், மின்சார உற்பத்திகள், போக்குவரத்து உற்பத்தி நடவடிக்கைகளுக்கு 90% மூலப்பொருள் இரும்புருக்காகும்.
- அலுமினியம் கண்டுப்பிடிக்கப்பட்டதன் பின் இரும்புருக்கின் கேள்வி 65% ஆக குறைவடைந்தது.

✓ 2000 ஆம் ஆண்டில் 70 மில்லியன் மெற்றிக் தொன் அளவில் காணப்பட்ட இரும்புருக்கு உற்பத்தி 2012 இல் 130 மில்லியன் மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது.




**உலகின் தற்போதைய இரும்புருக்கு உற்பத்திப் போக்கு**

## இரும்புருக்கு உற்பத்தியில் பங்களித்துள்ள நாடுகள்.

| நாடுகள் | 2007 (மி. மெ. தொன்) | 2008(மி. மெ. தொன்) |
|---|---|---|
| சீனா | 498.9 | 502 |
| ஜப்பான் | 120.2 | 118.7 |
| ஐக்கிய இராச்சியம் | 98.2 | 91.5 |
| ரஷ்யா | 72.4 | 68.5 |
| இந்தியா | 53.1 | 55.1 |
| தென்கொரியா | 51.5 | 53.1 |
| ஜேர்மனி | 48.6 | 45.8 |
| ஏனையவை | 402.5 | 394.6 |

## இரும்பு உற்பத்தி நாடுகளும், பரவியுள்ள பிரதேசங்களும்



## உலகின் பல்வேறு நாடுகளில் இரும்புருக்கு உற்பத்தி அமைவதற்கு பங்களித்த காரணிகள்.

| நாடுகள் | உற்பத்தி வலயம் | இட அமைவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் |
|---|---|---|
| சீனா | தெற்கு மஞ்சூரிய, பீஜிங், சான்சிங்வான் | புவியின் மேற்பரப்பில் இரும்புத்தாது கிடைக்கின்றது. |
| ஜப்பான் | ஒசாக்கா, கோபே, கியோட்டோ, டோக்கியோ, யொக்கஹாமா, வட கியூசு, நாகோயா கைத்தொழில் வலயம் | ஏற்றுமதி, இறக்குமதிக்கான துறைமுக வசதி, சந்தை வாய்ப்பு |
| ஐக்கிய இராச்சியம் | பர்மிங்ஹாம், தெற்கு வேல்ஸ், வடகிழக்கு கடற்கரை, லங்காசயர் | இரும்புதாது, நிலக்கரி என்பனவற்றுக்கான இலகுவான அடைகையும், இரும்புதாதினை இறக்குமதி செய்வதற்கான துறைமுக வசதியும் காணப்படுகின்றமை. |
| ரஷ்யா | குஷ்நெட்ஸ், மொஸ்கோ வடிநில வலயம், யூரல் வலயம் | அதிக இரும்பு உள்ளடகத்தைக் கொண்ட இரும்புதாது கிடைக்கின்றமை. |
| இந்தியா | மேற்கு, கிழக்கு, தெற்கு கைத்தொழில் வலயம், | பீகார், ஒரிசா மாநிலங்களில் இரும்புத்தாது கிடைக்கப் பெறுகின்றமை. ஆற்று நீரின் மூலம் இலகுவான அடைகை. |
| ஐக்கிய அமெரிக்கா | பிற்ஸ்பேர்க், டெற்றோயிட் கைத்தொழில் வலயம், மிக்சிகன் ஏரிக்கரை, நியூ இங்கிலாந்து, தெற்கு அப்பலாச்சியன் பிரதேசம் | போக்குவரத்துக்கு ஏரியைப் பயன்படுத்தல். ஏரிகளை சூழ்ந்து மூலப்பொருட்கள் கிடைப்பனவு. |

## உலகில் இரும்புருக்கு வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடுகள் (2012)

| ஏற்றுமதி (மில்லியன் மெற்றிக் தொன்) | | | இறக்குமதி (மில்லியன் மெற்றிக் தொன்) | | |
|---|---|---|---|---|---|
| நாடு | 2011 | 2012 | நாடு | 2011 | 2012 |
| சீனா | 44.4 | 51.2 | ஐக்கிய இராச்சியம் | 25.3 | 29.7 |
| ஜப்பான் | 40.3 | 41.1 | ஐரோப்பிய நாடுகள் | 34.0 | 25.2 |
| ஐரோப்பிய நாடுகள் | 36.2 | 37.8 | தென்கொரியா | 22.3 | 19.9 |
| தென் கொரியா | 28.0 | 29.4 | தாய்லாந்து | 12.3 | 14.9 |
| ரஷ்யா | 24.6 | 26.5 | சீனா | 15.9 | 13.8 |

## இரும்புருக்குக் கைத்தொழிலின் பண்புகளும் போக்குகளும்

- நீண்டகாலம் நிலைத்திருக்கும், உறுதிதன்மை நெகிழ்ச்சித் தன்மை, இலாபகரமான உற்பத்தி, அதிர்வுக்கு ஈடுக்கொடுக்கக்கூடிய திறன்.
- ஏனைய உலோகங்களுடன் (அலுமினியம், செம்பு) கலக்கும் போது அதன் தரத்தை உயர்த்தக் கூடியதாக இருத்தல்.
- பாவனையில் இருந்து ஒதுக்கிய பின் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது.
- பல்வேறுப்பட்ட உற்பத்திகளுக்கான அடிப்படை உலோகமாக பயன்படுத்தியமை.
- பாரம்பரிய தொழில் நுட்பத்தில் இருந்து விலகி நவீனமயப்படுத்தப் பட்டுள்ளமை.
- இரும்பை உருக்குவதற்கு நிலக்கரிக்கு பதிலாக மாற்று சக்தி பயன்படுத்தபடல்.
  உ.ம் - மின்சார உலைகள்.
- ஆரம்பத்தில் முன்னணி வகித்த நாடுகள் சில படிப்படியாக பின்னடைந்தமை.
- உருக்குக்கான கேள்வி அதிகரிப்பால் கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து புதிய சந்தை உருவாகியுள்ளமை.
  உ-ம் - சீனா, தென்கொரியா
- அபிவிருத்தியுடன் பல்வேறு இலத்திரனியல் தொழில்நுட்ப பயன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை.
- குறிப்பிட்ட நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் உருக்கை ஏற்றுமதி செய்யும் அதேவேளை உருக்கு இறக்குமதியையும் செய்கின்றன.
  உ-ம் - சீனா, தென் கொரியா
- கடந்த காலங்களில் மூலப்பொருளாகிய இரும்புத்தாது, நிலக்கரி அமைந்துள்ள இடத்திலேயே கைத்தொழில் காணப்பட்டது. ஆனால் இன்று மூலதனம், சந்தை ஆகிய வேறு காரணிகள் கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன.

# மோட்டார் வாகனக் கைத்தொழில்

- மோட்டார் வாகன விருத்திக்கு தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி, தொழில் நுட்ப அபிவிருத்தி என்பன அடிப்படையாக காணப்படுகின்றது.
- வாகனத்தின் உட்கட்டமைப்பு உறுதி, வடிவம், பருமன் என்பன ஒன்றுக்கு ஒன்று வேறுப்படுவது கொண்டுசெல்ல எதிர்பார்க்கப்டும் பொருட்களின் வகையில் ஆகும்.
- கடந்த காலங்களில் அபிவிருத்தி அடைந்த நாடுகளே மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகித்தன.
- இதற்கு காரணம் உற்பத்திக்காக அதிகளவு மூலதனம் தேவைப்பட்டமையாகும்.
- நுகர்வோரின் விருப்பிற்கும், பயன்பாட்டிற்கும் ஏற்ப உற்பத்தி செய்யப்படுகின்றது.
- அத்தியாவசியமான பாகங்கள் ஓரிடத்திற்கு கொண்டு வரப்பட்டு பொருத்தும் கைத்தொழிலாக இறுதி உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

## பல்வேறுப்பட்ட தேவைகளுக்கான மோட்டார் வாகனங்களின் வகைகள்





## 1950 – 2012 வரையான காலப்பகுதியில் மோட்டார் வாகன உற்பத்தியின் அளவு

- இத்தரவின் மூலம் ஆரம்ப காலங்களில் மோட்டார் வாகன உற்பத்தி தொடர்பாக சீனா குறைந்தளவு பங்களிப்பையே வழங்கியுள்ளது. 2012 இல் சீனா உற்பத்தியில் முன்னணியில் உள்ளது.
- 1950 இல் ஐக்கிய அமெரிக்கா முதலிடத்தில் இருந்தபோதும், 2012 இல் அந்நிலைமை மாற்றம் அடைந்துள்ளது.
- 1950 – 2000 வரையான காலப்பகுதியில் பெரிய அளவில் வாகன உற்பத்தி செய்த பிரான்ஸ் 2010 இன் பின் அந்நாட்டினால் முதல் 10 நாடுகளுக்குள் வர முடியவில்லை.

| 1950 | 1960 | 1970 | 1980 | 1990 | 2000 | 2010 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| ஐ.அமெ 8 005 858 | ஐ.அமெ 7 905 119 | ஐ.அமெ 8 283 949 | ஜப்பான் 11 042 884 | ஜப்பான் 13 488 798 | ஐரோப்பியஒன்றியம் 17 142 142 | சீனா 18 284 887 | சீனா 19 271 808 |
| ஐக்கிய இராச்சியம் 783 672 | ஜேர்மனி 2 058 149 | ஜப்பான் 5 289 157 | ஐ.அமெ 8 009 841 | ஐ.அமெ 9 782 997 | ஐ.அமெ 12 799 857 | ஐரோப்பியஒன்றியம் 17 107 350 | ஐரோப்பியஒன்றியம் 18 240 476 |
| கனடா 387 728 | ஐக்கிய இராச்சியம் 1 810 700 | ஜேர்மனி 3 842 247 | ஜேர்மனி 3 878 553 | ஜேர்மனி 4 976 552 | ஜப்பான் 10 140 798 | ஜப்பான் 9 625 940 | ஐ.அமெ 10 328 884 |
| பிரான்ஸ் 357 512 | பிரான்ஸ் 1 389 210 | பிரான்ஸ் 2 750 088 | பிரான்ஸ் 3 378 433 | பிரான்ஸ் 3 468 993 | ஜேர்மனி 5 528 615 | ஐ.அமெ 7 761 443 | ஜப்பான் 9 942 711 |
| ரஷ்யா 342 200 | இத்தாலி 644 833 | ஐக்கிய இராச்சியம் 2 098 498 | ரஸ்யா 1 884 000 | இத்தாலி 2 120 850 | பிரான்ஸ் 3 348 381 | ஜேர்மனி 5 905 985 | ஜேர்மனி 5 849 269 |
| ஜேர்மனி 308 084 | ரஷ்யா 490 200 | இத்தாலி 1 854 252 | இத்தாலி 1 610 287 | ஸ்பெயின் 2 053 350 | தென் கொரியா 3 114 998 | தென் கொரியா 4 271 941 | தென் கொரியா 4 557 738 |
| இத்தாலி 127 847 | ஜப்பான் 481 551 | கனடா 1 159 504 | ஐக்கிய இராச்சியம் 1 312 914 | கனடா 1 947 108 | ஸ்பெயின் 3 032 874 | இந்தியா 3 538 783 | இந்தியா 4 145 194 |
| ஜப்பான் 31 597 | கனடா 397 739 | ரஷ்யா 737 300 | ஸ்பெயின் 1 181 859 | ஐக்கிய இராச்சியம் 1 585 957 | கனடா 2 981 638 | பிறேசில் 3 381 728 | பிறேசில் 3 342 817 |
| செக் 31 000 | அவுஸ்திரலியா 204 000 | ஸ்பெயின் 539 132 | பிறேசில் 1 165 174 | தென்கொரியா 1 321 630 | சீனா 2 089 089 | ஸ்பெயின் 2 387 900 | மெக்சிக்கோ 3 001 974 |
| இந்தியா 14 888 | பிறேசில் 133 041 | அவுஸ்ரேலியா 475 000 | பெல்ஜியம் 923 426 | பெல்ஜியம் 1 248 290 | மெக்சிக்கோ 1 935 527 | மெக்சிக்கோ 2 345 124 | தாய்லாந்து 2 483 043 |

- 2012 இல் உற்பத்தியில் சீனா, தென் கொரியா, இந்தியா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய ஆசிய நாடுகள் துரித வளர்ச்சியைக் காட்டியுள்ளன.
- தற்போது மோட்டார் வாகன உற்பத்திக்காக "ரோபோக்கள்" மற்றும் தன்னியக்க இயந்திரங்கள், பொறியியற் தொழிலாளர்களைப் போல் பயன்படுத்தப்படுகின்றது.
- இக்கைத்தொழிலில் உதிரிபாகங்களைப் பொருத்தும் கைத்தொழில் பிரபல்யம் பெற்று வருவதுடன் விரைவாக வளர்ச்சி அடைந்தும் வருகின்றது.

## 2009 இல் உலகின் மோட்டார் வாகன உற்பத்திப் பரம்பல




## மோட்டார் வாகன உற்பத்தியின் பண்புகளும் போக்குகளும்

- துரிதமாக மாற்றமடைந்து வரும் கைத்தொழிலாக மாறிவருதல்.
- நவீன தொழில்நுட்பத் திறன்களையும் பொறியியல் உழைப்பையும் உச்ச அளவில் பயன்படுத்தல் (ரோபோ தொழிற்நுட்பம்).
- உதிரிப்பாகங்களைப் பொருத்தும் கைத்தொழிலாக விரிவடைதல்.

  உ-ம் - தாய்வான், தென் கொரியா, இந்தோனேசியா, சிங்கப்பூர்
- பாரியளவு மூலதனத்தை முதலிடல்.
- உற்பத்தி உரிமை பெரும்பாலும் பல்தேசியக் கம்பனிகளைச் சார்ந்தது.
- ஒன்றினைந்த நிறுவனங்கள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்படல்.

  உ – ம் - சீனாவின் சங்காய் கம்பனியுடன் ஐ. அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார் நிறுவனம் ஒன்றிணைப்பு.
- அதிக சொகுசு வாகனங்களை உற்பத்தி செய்தல்.
- பொருட்களை கொண்டு செல்வதற்கு பொருத்தமான விசேட வாகனங்களை வடிவமைத்தல்.

  உ-ம் - எரிபொருள், பால், வாயு என்பவற்றை கொண்டு செல்லும் கொள்கலன்கள். இவை ஒன்றுக்கு ஒன்று வேறுப்பாடு உள்ளவை.
- நீர், நிலம் இரண்டிலும் பயன்படுத்தக்கூடிய வாகன உற்பத்தி.

  உ-ம் - மிதவைப் படகு
- நீரில் சுழியோடக்கூடியதும், நிலத்தில் பயணிக்கும் பொழுது அவை தங்களை மாற்றக்கூடியதும், வானத்தில் பறக்கக்கூடியதுமான இலகு விமானங்கள் உற்பத்தி.

- மலிவான தொழிலாளர், மூலப்பொருள் கிடைப்பனவு, வெளிநாட்டு சந்தை வாய்ப்பு காரணமாக துரித வளர்ச்சி.

  உ-ம் - ஜப்பான், இந்தியா , தென்கொரியா, சிங்கப்பூர், இந்தோனேசியா.
- புதிய நாடுகளின் பங்களிப்பு. உ-ம் - இலங்கை
- சூழல்நேய வாகனங்களை உற்பத்தி செய்தல்.
- மோட்டார் வாகன உற்பத்தியில் விருத்தி அடைந்த நாடுகள் ஏனைய நாடுகளில் கைத்தொழிற்சாலைகளை உருவாக்குதல்.
- அதி உச்சப் பாதுகாப்பினையும் பல்வேறு வசதிகளையும் உறுதிப்படுத்தும் வகையில் வாகனத்துக்குள் இலத்திரனியல் பாகங்கள், கருவிகளையும் (நுணர்வு) இணைத்தல்.
- பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உபகரணங்கள், இலத்திரனியல் சாதனங்களும் இணைக்கப்பட்டு உள்ளமை.

  உ-ம் - GPS, தொலைக்காட்சி, குளிரூட்டி
- 2020 பின் இலகுவான கலப்பின வாகனங்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளமை.
- சிறிய வாகனங்களை உற்பத்தி செய்தல்.

# கப்பல் கட்டும் கைத்தொழில்

- 18ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதிக்கு பின் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்கள், இரும்புருக்கு கைத்தொழில் அபிவிருத்தி என்பனவற்றுடன் இணைந்த வகையில் கப்பல் கட்டும் கைத்தொழில் விருத்தியடைந்தது.

## ஐரோப்பாவில் கப்பல் கட்டும் கைத்தொழில் விருத்தி அடைந்தமைக்கான காரணங்கள

- கப்பல் கட்டுவதற்கு தேவையான இரும்புருக்கு மற்றும் மரங்கள் காணப்பட்டமை.
- கப்பலை நிறுத்தி வைப்பதற்கு பாதுகாப்பான கரையோரங்கள் காணப்பட்டமை.
- அரச ஆதரவு.
- மறுமலர்ச்சிக் காலத்தின் பின்னர் ஐரோப்பாவில் கடற்பிரயாணங்கள், வர்த்தகம், மீன்பிடி, போர் நடவடிக்கைகள் என்பனவற்றால் கப்பல்களுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வி.
- ஆரம்ப காலங்களில் பொருட்களை ஏற்றி செல்லவும், பிரயாணங்களுக்கும் கப்பல் பயன்படுத்தப்பட்டது.
- விமானங்களின் வருகையின் பின்னர் பயணிகளின் தொகை குறைவடைந்ததன் காரணமாக பொருட்களை ஏற்றி செல்லக்கூடிய கப்பல்களை உருவாக்க ஆரம்பித்தனர்.
- தற்காலத்தில் பயணிகள் போக்குவரத்துக்காக சொகுசு கப்பல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- இன்று கொண்டு செல்லும் பொருட்களுக்கு ஏற்ப கப்பல்கள் பலவகையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.


  உ-ம் - கொள்கலன் கப்பல்கள், எண்ணெய்த்தாங்கி கப்பல்கள்

**கப்பல் கட்டும் கைத்தொழிலில் விருத்தியடைந்த நாடுகள் மாத்திரம் கவனம் செலுத்தியமைக்கான காரணம்.**

- பாரியளவு பணத்தினை மூலதனமாக முதலிடக் கூடியதாக இருந்தமை.
- மூலப்பொருளாக இரும்பு உருக்கு போதியளவு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.
- நன்மதிப்பு மற்றும் அனுபவம் காணப்பட்டமை.

➢ இன்று சீனா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இத்தொழிலில் முன்னணியில் உள்ளன. இதற்கான காரணங்கள்,

- ✓ மலிவான மற்றும் திறன் மிக்க தொழிலாளர் கிடைக்கப்பெறுகின்றமை.
- ✓ புதிய தொழில்நுட்பம் காணப்பட்டமை.
- ✓ கப்பற் தளங்களுக்கு வசதியாகப் பனிப்போர்வை அற்ற ஆழமான கடல் முனைவுப் பகுதிகள் காணப்பட்டமை.
- ✓ அண்மைக்காலத்தில் இலங்கையும் பொருத்தும் கைத்தொழிலாகப் படகுகளைப் கட்டும் தொழிலை ஆரம்பித்துள்ளது.
- ✓ கப்பல் கட்டும் கைத்தொழிலை ஒரு பொருத்தும் கைத்தொழிலாக விருத்தி பெற்ற போது கடந்த காலங்களில் கப்பல் கட்டிய நாடுகள் தாம் கொண்டிருந்த நிலையை இழந்துள்ளமையை வரைபின் மூலம் அறியலாம்.




**1970-2008 க்கு இடையே பிரதான கப்பல் கட்டும் நாடுகளின் சந்தைக்கான (CGT) பங்களிப்பு**

## கப்பல் கட்டும் கைத்தொழிலின் பண்புகளும் போக்குகளும்


- பயணிகள் போக்குவரத்துக்கு அல்லது பல்வேறுப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப கப்பல்களை கட்டுதல்.
- கோரிக்கையின் பிரகாரம் சிறிய அதிசொகுசு தோணிகளை கட்டுதல்.
- பல்வேறுப்பட்ட தேவைகளுக்காகக் கப்பல்களை கட்டுதல்.
  உ-ம் - யுத்தங்கள், கடல் ஆய்வு, மீன்பிடி, வாசிகசாலை
- இரும்புருக்கு பதிலாக பாரம் குறைந்த உலோகங்கள் மற்றும் பல்வேறு வகையான நூலிழைகள், ஏனைய பிரதியீடுகள் பயன்படுத்தப்பட்டு இலகு மரக்கப்பல்கள் கட்டுதல்.
- பொருத்தும் கைத்தொழில் வளர்ச்சி அடைந்துள்ளமை.
- பொறியியல் தொழிலாளரின் பயன்பாடு.
  உ-ம் - ரோபோக்கள், இயந்திரத் தொழில்நுட்பம்
- சக்தி மூலாதாரங்களின் மாற்றம்.
  உ-ம் நிலக்கரி, கனிய எண்ணெ, அணுசக்தி
- பாரம்பரிய கப்பல் கட்டும் நாடுகளுடன் புதிய நாடுகள் போட்டியிட்டு முன்னணி வகித்தல்.
  உ-ம் - சீனா, தென் கொரியா
- புதிய தொழிற்நுட்பங்கள் பயன்படுத்தியமையினால் முன்னேற்றம் அடைந்தமை.
  உ-ம் - GPS முறைமை
- தற்போது கூடுதலான கப்பல் பொருட்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றமை.
- பாரமான பொருட்களை எடுத்துச் செல்லும் கப்பல்கள், எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள், கொள்கலன்களைக் கொண்டு செல்லும் கப்பல்களுக்கே அதிக கேள்வி காணப்படுகின்றன.

# இலத்திரனியல் கைத்தொழில்

- இலத்திரனியல் கைத்தொழிலின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறுப்பட்ட பொருட்களை எமது சமையலறை மற்றும் வரவேற்பறைகளிலும், அலுவலகங்கள் மற்றும் வாகனங்களிலும் காணமுடிகின்றன.



## வலயங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் துறைகளுக்கு ஏற்ப உலகில் இலத்திரனியல் உற்பத்தி




- ✓ சீனா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் முன்னணி இருப்பதுடன் 2008 ஆம் ஆண்டில் சீனா 26% பங்களிப்பை வழங்கியுள்ளது.
- ✓ இலத்திரனியல் உபகரணங்களுக்கான சந்தை எனும் போது ஏற்றுமதி செய்யும் நாடுகளே இறக்குமதி நாடுகளாகவும் காணப்படுகின்றன.


**இலத்திரனியல் உபகரணத்தின் உற்பத்தியும் வர்த்தகமும் (மில்லியன் யூரோக்களில்) 2008 - 2013.**

| வலயம் | உற்பத்தி | | வர்த்தகம் | |
|---|---|---|---|---|
| | 2008 | 2013 | 2008 | 2013 |
| ஐரோப்பா | 251 124 | 246 724 | 241 229 | 260 489 |
| வட அமெரிக்கா | 204 317 | 184 900 | 210 349 | 217 986 |
| ஜப்பான் | 162 760 | 163 970 | 90 419 | 105 399 |
| சீனா | 296 607 | 416 070 | 78 821 | 110 244 |
| ஏனைய ஆசிய பசுபிக் நாடுகள் | 184 383 | 244 075 | 81 192 | 114 248 |
| ஏனைய நாடுகள் | 36 356 | 42 487 | 73 347 | 90 207 |

மூலம் - *www.decision.eu (2014.02.10)*

- ➨ இக்காலப்பகுதியில் உற்பத்தியில் முன்னேற்றம் காணப்படுகின்றது.
- ➨ வட அமெரிக்காவும், ஐரோப்பாவும் உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் முன்னணி வகிப்பது தெளிவாகின்றது.
- ➨ 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டு இரு பிரதேசங்களிலும் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.
- ➨ 2000-2010 வரையான காலப்பகுதியில் சீனா இக்கைத்தொழிலில் பலம் வாய்ந்த நாடாக தோற்றம் பெற்றுள்ளது.

- இக்காலப்பகுதியில் சீனா பெற்றுக்கொண்ட வருமானம் 604 RMB பில்லியனில் இருந்து 6365 பில்லியன் RMB ஆக உயர்வடைந்தது.
- கீழே உள்ள வரைபின் மூலம் சீனாவின் கைத்தொழில் தொடர்பாக அறிவதுடன் உலக இலத்திரனியல் உற்பத்தி எத்திசையில் நகர்கின்றது என்பதையும் அறியலாம்.




வரைபு 5.5
2000 - 2010 காலத்தில் இலத்திரனியல் பொருட்களின் உற்பத்தியில் சீனாவின் வருமான வளர்ச்சி
மூலம் ( *http://www.hktdc.com (2014.02.10) (RMB = Renminbi)*
(*RMB* சீனாவில் அரச செயற்பாட்டில் பயன்படுத்தும் பணவகை)

- 2009 இல் சீனாவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களின் உற்பத்தி பெறுமானம் அட்டவணையல் காட்டப்பட்டுள்ளது.

**உலகின் இலத்திரனியல் சார்ந்த உப உற்பத்திகளில் சீனாவின் பங்களிப்பு (2009)**

| இலத்திரனியல் உற்பத்திகள் | உலக உற்பத்தியில் சீனாவின் பங்களிப்பு |
|---|---|
| லேசர் இறுவட்டு (Laser disk players) | 85.0% |
| எண்ணிலக்க புகைப்படக் கருவிகள் (Digital Cameras) | 80.0% |
| கணினி பாகங்களின் தொகுதி | 60.9% |
| கையடக்கத் தொலைபேசிகள் | 49.9% |
| வர்ணத் தொலைக்காட்சி பாகங்களின் தொகுதி | 48.3% |

- அட்டவணையின் படி சீனா சிறிய மற்றும் பெரிய இலத்திரனியல் உபகரணங்களை சந்தைக்கு வழங்குவதில் முக்கிய பங்காற்றுக்கின்றது.
- சீனாவின் இலத்திரனியல் பொருட்களுக்கு இலங்கை முக்கிய சந்தையாக காணப்படுகின்றது.
- ஏனைய நாடுகளிலும் இதன் உற்பத்தி பயன்படுத்துவது காணக்கூடியதாக உள்ளது.

# இலத்திரனியல் கைத்தொழிலின் பண்புகளும், போக்குகளும்

- பாரியளவு மூலதனம் முதலிடப்பட்டுள்ளமை.
- இறுதி உற்பத்தி வரை ஆராச்சி தொடர்வதுடன், உற்பத்திக்கு மட்டுமன்றி கைத்தொழில் தொடர்பான ஆராச்சிக்கும் இரண்டு மடங்கான பணம் செலவழிக்கப்படுகின்றமை.
- பெரும்பாலான பணியாளர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், பயிற்றப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஆராச்சி ஆளணியினராகக் காணப்படுகின்றமை.
- சேவைக் கைத்தொழிலில் ஈடுப்பட்டுள்ள ஆளணியினரில் அரைப்பங்கினர் ஆராச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளில் ஈடுப்பட்டுள்ளமை.
- உற்பத்திக்கான பங்களிப்பும், உரிமையும் பெரும்பாலும் பல்தேசியக் கம்பனிகளின் உரித்தாக உள்ளமை.
- புதிய உற்பத்திகள் சந்தையின் போட்டிநிலைக்கு ஏற்றவாறு நாளுக்கு நாள் வெளியிடப்பட்டுள்ளமை. உ-ம் - கையடக்க தொலைப்பேசி, தொலைக்காட்சி, புகைப்படக்கருவி
- மிக நுட்பம் வாய்ந்த உபகரணங்களினதும், உதிரிப்பாகங்களினதும் உற்பத்தி. உ-ம் - வீடியோ கருவிகள், சிப்ஸ், புகைப்படக்கருவி
- ஏற்றுமதி செய்கின்ற நாடுகளே ஏனைய நாடுகளின் உற்பத்திகளையும் இறக்குமதி செய்கின்றன.
- பொருத்தும் தொழிலாக நிர்வகிக்கப்படுகின்றமை.
- இலத்திரனியல் உபகரணங்களின் உற்பத்திக்கும், வர்த்தகத்துக்கும் மேலதிகமாக உப உற்பத்திகளுக்கான சந்தையும் உருவாக்கப்பட்டுள்ளது. உ-ம் - கணினிகளுக்கான வைரஸ், வைரஸ் பாதுகாப்புத் தொகுதிகள், அத்தொகுதியைப் புதுப்பிப்பதற்கான தேவை உருவாக்கம், காந்த வட்டுக்கள், CD, DVD போன்ற காந்த வட்டுக்கள.

# பருத்திப் புடவைக் கைத்தொழில

- 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் போது இக்கைத்தொழில் ஒழுங்குப்படுத்தப்பட்ட மற்றும் முறை சார்ந்த தொழிலாக விருத்தியடைந்தது.
- அந்நேரத்தில் பிரித்தானியா இக்கைத்தொழிலில் தனியுரிமையைப் பெற்றுக்கொண்டது.
- பிற்பட்ட காலத்தில் சீனா, இந்தியா, ஜப்பான், எகிப்து போன்ற நாடுகள் விருத்தியடைந்தது.


## இதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்

- ✓ பருத்தியை இலகுவில் பயிர்செய்யக்கூடியதாக இருந்தது.
- ✓ பருத்தியை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தது.
- ✓ மலிவான தொழிலாளர்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

✓ நவீன தொழிநுட்பம் காணப்பட்டமை.

✓ போதியளவு சந்தை கிடைத்தமை.

## உலகில் பருத்தி பயிரிடப்படும் பிரதேசங்களும், புடவை கைத்தொழில் உற்பத்தி நாடுகளும்




## பருத்தி நெசவுக் கைத்தொழிலின் பண்புகளும், போக்குகளும்

- நீண்ட வரலாறு காணப்படுகின்றமை.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை நிர்வகித்தல்.
- ஆரம்ப காலங்களில் பருத்தியை பயிரிடும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை அடிப்படையாகக்கொண்டு பருத்திப் புடவைக் கைத்தொழில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், தற்போது பருத்தி பயிரிடும் நாடுகளும் இக்கைத்தொழிலில் ஈடுப்பட்டுள்ளன.
- ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகள் ஆரம்ப உற்பத்தியாளர்களாக இருந்தாலும், 21 ஆம் நூற்றாண்டின் 2வது அரைப்பகுதியில் கிழக்காசிய நாடுகளும் முன்னணி உற்பத்தியாளர்களாகத் தோற்றம் பெற்றமை.
- பருத்தியுடன் ஏனைய நாரிழைகளைக் கலந்து உயர் தரத்திலான பல்வகைப் புடவைகளை உற்பத்தி செய்தல்.

  உ-ம் - செயற்கை நாரிழைகள், கம்பளி, விதைகள்

- செயற்கை நாரிழைகள் சணலும், கம்பளியும் போன்ற ஏனைய செயற்கை நாருடன் கலந்த உற்பத்திகளும் பல்வேறு தரமுடைய துணிகளும்.

- இக்கைத்தொழில் முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்ட போது உயர் தரத்திலான புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- சூழல்நேய உற்பத்தியாக உள்ளமை.
- துணிகளுக்கு வர்ணமிடல், ஆடை உற்பத்தி என்பவை உள்ளிட்ட உப உற்பத்திக் கைத்தொழிலின் தோற்றம்.

## உலகில் தயாரிப்பு கைத்தொழில்கள் சார்ந்த பிரச்சினைகள்

- தயாரிப்பு கைத்தொழில் மூலம் பாரிய பங்களிப்பு செய்கின்ற அதேசமயம், உலகையும் மனிதனையும் பல்வேறு வழிகளில் பாதித்துக் கொண்டிருக்கின்றது.

### 1. மூலப்பொருள் சார்ந்த பிரச்சினைகள்

- நீண்டகாலப் பாவனையினால் மூலப்பொருள் இல்லாமல் போதல்.
- இயற்கை மூலப்பொருட்களுக்குப் பதிலாகச் செயற்கை மூலப்பொருள் பயன்படுத்தப்படுகின்றமை.
  உ-ம் - செயற்கை இறப்பர், செயற்கை நாரிழைகள்.

### 2. தொழிலாளர் சார்ந்த பிரச்சினைகள்

- ✓ தொழிற்சாலைகளில் இயந்திரப் பாவனை அதிகரித்துள்ளமை காரணமாகப் பாரியளவிலான வேலையில்லாப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.
  உ-ம் - ரோபோக்களின் பயன்பாடு
- ✓ பயிற்றப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறை
- ✓ தொழிலாளர்களுக்கான செலவு உயர்வடைதல்.
- ✓ தொழிலாளர் சார்ந்த பிரச்சினைகள் தோற்றம்.

### 3. சுற்றாடல் பிரச்சினைகள்.

- நிலம், வளி, சமுத்திரப்படுக்கை மாசடைதல்.
  உ-ம் - சாயங்கள் கலத்தல், பல்வேறு வகையான எண்ணைய், நச்சுப் பதார்த்தங்கள்.
- குறிப்பிட்ட தாவர, விலங்குகள் அருகிச் செல்லல், இரசாயன உரங்கள், கொல்லிகள், பூச்சி நாசினிகள் மற்றும் பல்வேறுப்பட்ட ஹோர்மோன்கள் காரணமாகப் புதிய இனங்களின் பிறப்பாக்கம்.
- கைத்தொழிற் கழிவுகளின் வெளியேற்றம்.
- மேக்கூரி, ஈயம் போன்ற பாரமான உலோகத் துணிக்கைகள் உயிரியல் தொகுதிகளில் கலத்தலால் விலங்குகளின் மரபணுவில் அசாதாரண நிலையினை உருவாக்கல்.
- பூகோளம் வெப்பமடைதல், காலநிலை மாற்றங்கள், அமில மழை பொழிதல், தரைக்கீழ் நீர் மாசடைதல்.

- கைத்தொழில் விருத்தியுடன் இலத்திரனியல் கழிவுகளும், உபகரணக் கழிவுகளும் மேலதிகமாகச் சேர்தல்.
- உயர் தொழில்நுட்ப விருத்தியுடன் இதுவரையில் உலகில் காணப்படாத வைரஸ், பற்றீரியா, பங்கசு போன்ற நோய்காவிகளின் பரம்பல்.

## 4. சமூக, பொருளாதாரப் பண்பாட்டுப் பிரச்சினைகள்

- கைத்தொழில் மூலப்பொருட்களைப் பெறுவது தொடர்பாகவும், சந்தைக்கான முடிவுப்பொருளை அதிகளவில் உற்பத்தி செய்தல் தொடர்பாகவும், சந்தைகளை விரிவுப்படுத்தல் தொடர்பாகவும் பிரச்சினைகள் எழுகின்றன.
- பிரபல்யமான பொருட்களின் பெயர்களில் போலியான பொருட்களை சந்தைப்படுத்தல்.
- பல்தேசிய கம்பனிகளின் செல்வாக்கிற்கு உட்படுத்தல்.
- நுகர்வோரது தேவையை நிறைவு செய்வதை விட, இலாபத்தை உழைப்பதே பிரதான நோக்கமாக மாறியமை.
- இலத்திரனியல் பொருட்களைத் திருத்துவதற்கான செலவு அதிகம்.
- யுத்த தளபாடங்களின் உற்பத்தியினால் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.
- கைத்தொழிலாக்கத்தின் விளைவாக ஏற்பட்டுவரும் நகராக்கத்தின் காரணமாக வாழ்வதற்குப் பொருத்தமில்லாத குடிசைகள், சேரிப்புறங்கள் உருவாகியுள்ளமை.
- சில சமூகப் பிரிவினர் குற்றச் செயல்கள், மோசடி மற்றும் களவுகளில் ஈடுபடத் தூண்டப்படுகின்றனர்.

## 5. சக்தி மற்றும் வலு தொடர்பான பிரச்சினைகள்.

- கனிய எண்ணைய் விலையில் தளம்பல்கள்.
- சக்தி மற்றும் வலு வளங்கள் குறைவடைந்து செல்லல்.
- சக்தி மூல வளங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் முடிவில்லாத அரசியல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

  உ-ம் - மத்திய கிழக்கு எண்ணைய் வலயங்களில் அரசியல் பிரச்சினை
- அணு சக்தியினால் ஏற்படும் சூழலியல் பிரச்சினை.

  உ-ம் - ஜப்பானின் அணுவாலையில் ஏற்பட்ட கதிர்வீச்சுப் பொருட்களின் கசிவு.
- சக்தி மூலவளம் என்றவகையில் அணுசக்தி முக்கியமானது. இதனைச் சட்ட ரீதியற்ற முறையில் வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்துதல்.